**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 28 ஒக்டோபர் 2019

Good Food, Good Life

## 2019 SLIM NASCO நிகழ்வில் வெற்றி வாகை சூடியது நெஸ்லே நிறுவனம்

அண்மையில் இடம்பெற்ற 2019 SLIM NASCO (தேசிய விற்பனை மாநாடு) விருதுகள் நிகழ்வில் நெஸ்லே நிறுவனத்தின் ரிமாஸ் ரிஸ்வி மற்றும் அனுருத்த ரத்வத்த ஆகியோர் தங்க விருதுகளை வென்றுள்ளனர். 'ஆண்டின் மிகச் சிறந்த பிரதேச முகாமையாளர்' (Territory Manager of the Year) என்ற விருதை ரிமாஸ் அவர்கள் வென்றுள்ளதுடன், 'பிரதேச முகாமையாளர் (நவீன வர்த்தகம்) - தங்கம்' (Territory Manager (Modern Trade) – Gold) விருதையும் தனதாக்கியுள்ளார். அத்துடன் விரைவாக விற்றுத் தீருகின்ற நுகர்வோர் உற்பத்திகள் - உணவுப் பிரிவில் 'விற்பனை அதிகாரி - தங்கம்' (Sales Executive - Gold) விருதை அனுருத்த அவர்கள் பெற்றுள்ளார்.

140 நிறுவனங்களைச் சேர்ந்த 750 விற்பனைத்துறை உச்ச தொழில்வல்லுனர்கள் 23 பிரிவுகளின் கீழ் இவ் விருதுகளுக்காகப் போட்டியிட்டிருந்தனர். கீர்த்தி மிக்க இந்த விற்பனை நிகழ்வில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் இனங்காணல் அங்கீகாரத்தை நெஸ்லே லங்கா நிறுவனம் சம்பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் விற்பனைத் துறைக்கான பிரதித் தலைமை அதிகாரியான ஜெகத் வெதகே அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், *''நெஸ்லே லங்கா நிறுவனத்தின் கொடியை உயரே பறக்கச் செய்தமைக்காக ரிமாஸ் மற்றும் அனுருத்த ஆகியோருக்கு எனது மனமார்ந்த மற்றும் இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். கடும் போட்டி மற்றும் நிலையற்ற சந்தை நிலைமைகள் காணப்படுகின்ற ஒரு காலகட்டத்தில் உண்மையான தீவிர உணர்வு, தைரியம் மற்றும் விடாமுயற்சி ஆகியனவே விற்பனையை முன்னெடுத்து அதிசிறந்த பெறுபேற்றுத்திறனை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றன. ரிமாஸ் மற்றும் அனுருத்த ஆகியோர் எமது விற்பனை அணியுடன் இணைந்து, இந்த தகைமைகளை வென்று, இலங்கையின் விற்பனைத் துறையில் ஒரு உச்ச நிறுவனம் என்ற நெஸ்லேயின் ஆதிக்கத்தை உலகிற்கு நிரூபித்து, எமக்கு பெருமை சேர்ப்பித்துள்ளனர்,''* என்று குறிப்பிட்டார்.

பெருமதிப்புமிக்க நடுவர் குழுவினால் போட்டியாளர்கள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், நிலையற்ற சந்தைச்சூழலில் வர்த்தகத்தை முன்னெடுக்கும் ஆற்றல், இலக்குகளை அடையப்பெறுவதற்கு நடைமுறைப்படுத்திய மூலோபாயங்கள், அவற்றை நிறைவேற்றுவதில் காண்பித்த புத்தாக்கத்திறன், விற்பனைத் துறையில் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்பு மற்றும் சந்தையில் வெற்றி காணும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நாட்டில் விற்பனை சமூகத்தை ஊக்குவித்து, உத்வேகம் அளித்து, உச்சப் பெறுபேறுகளை நிலைநாட்டுகின்றவர்களுக்கு இனங்காணல் அங்கீகாரத்துடன், விருதுகளையும், பாராட்டுக்களையும் வழங்கும் வகையில் வருடந்தோறும் தேசிய மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற நிகழ்வே SLIM-NASCO விருதுகள் வைபவமாகும். இலங்கையில் விற்பனை ஆளணிக்கு இனங்காணல் அங்கீகாரம் அளித்து, வெகுமதியளிப்பதில் கவனம் செலுத்தியுள்ள ஒரேயொரு விருதுகள் வழங்கும் வைபவமாக இந்நிகழ்வு இனங்காணப்பட்டுள்ளது.

---